## அந்தக் காலம் இந்தக் காலம்

நெனச்சதை எல்லாம் எழுதி வச்சது
அந்தக் காலம் – எதையும்
நேரில் பார்த்தே நிச்சயிப்பது
இந்தக் காலம் ஆமா... இந்தக் காலம்

மழைவரும் என்றே மந்திரம் செபிச்சது
அந்தக் காலம் – அது... அந்தக் காலம்
மழையைப் பொழிய வைக்கவே எந்திரம் வந்தது
இந்தக் காலம் ஆமா... இந்தக் காலம்.

இழிகுலம் என்றே இனத்தை வெறுத்தது
அந்தக் காலம் – மக்களை
இணைத்து அணைக்க முயற்சி பண்ணுவது
இந்தக் காலம் ஆமா... இந்தக் காலம்

திரோபதை தன்னைத் துயில் உரிஞ்சது
அந்தக் காலம் பெண்ணைத்
தொட்டுப் பாத்தா சுட்டுப்புடுவான்
இந்தக் காலம் ஆமா.. இந்தக் காலம்

சாஸ்திரம் படிப்பது அந்தக் காலம்
சரித்திரம் படிப்பது இந்தக் காலம்
கோத்திரம் பார்ப்பது அந்தக் காலம்
குணத்தைப் பார்ப்பது இந்தக் காலம்

பக்தி முக்கியம் அந்தக் காலம்
படிப்பு முக்கியம் இந்தக் காலம்
கத்தி தீட்டுவது அந்தக் காலம்
புத்தி தீட்டுவது இந்தக் காலம்

பெண்ணைப் பேயெனப் பேசி அணைச்சது
அந்தக் காலம் – வாழ்வின்
கண்ணில் ஒன்றாய் எண்ணி நடப்பது
இந்தக் காலம் ஆமா... இந்தக் காலம்.

– உடுமலை நாராயணகவி



**ஆசிரியர் குறிப்பு :** உடுமலை நாராயணகவி தமிழ்த் திரைப்படப்பாடல் ஆசிரியரும் நாடக எழுத்தாளரும் ஆவார். பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பியவர். 'பகுத்தறிவுக் கவிராயர்' எனத் தமிழக மக்களால் அழைக்கப்படுபவர். இவர் வாழ்ந்தகாலம் 25. 09. 1899முதல் 23. 05. 1981 வரை.